# மொழிப்போர் தளபதி எல்.கணேசன் நட்பின் மலை; தோழமையின் உச்சம்!

**நேற்றைய தொடர்ச்சி...**

**அ**றிஞர் அண்ணாவின் அறிக்கையோ வேண்டுகோளோ ஏற்கப்படாத நிலையில் கழக மாணவர்களை அழைத்துப்பேச விரும்பினார். எல்.ஜி.யைத் தான் அண்ணா அழைத்துப் பேசினார்.

“இந்தப் போரட்டத்தில் ஏராளமானோர் உயிர் இழந்ததும், படுகாயமடைந்ததும் அண்ணாவிற்குப் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் அளித்தது. கொந்தளிப்பான இந்தக் கால கட்டத்தில் அண்ணாவின் மனநிலை எப்படி இருந்தது என்பதை, அவருடைய அன்புத் தம்பிகளில் ஒருவரான, கவிஞர் கருணானந்தம் அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார்: (1965) பிப்ரவரி 11 ஆம் நாள் அண்ணா, காலையில் எழுந்தவர். மேலே சட்டையில்லாமல் படுக்கையிலேயே உட்கார்த்திருக்கிறார். செய்தித் தாள்களிலும், வானொலியிலும், தொலைபேசியிலும் வெளியூர்களின் போராட்டச் செய்திகள் வந்த வண்ணமுள்ளன. கோவை, திருப்பூர், குமாரபாளையம், பொள்ளாச்சி இங்கெல்லாம் மாணவர் மீது இராணுவம் சுடுகிறது, ஆணவமாய் என்று! நேரம் செல்லச் செல்ல அண்ணா அப்படியே சுருண்டு படுக்கிறார். எதிரிலிருந்த கலைஞரும், நானும் அண்ணா பல் விளக்கி விட்டு ஏதாவது சாப்பிடுங்கள் என்று கெஞ்சுகிறோம். முகம் பொலிவும், களையும் இழந்து, கண்கள் ஒளி குன்றிக் காணப்படுகின்றன. எழவே மறுக்கிறார். இவ்வளவு பேர் சாகிறான். சாப்பாடு ஒரு கேடா? போலீசார் சுட்டாலும் காரணம் கேட்கலாம். இராணுவம் சுடும் போது ஒன்றும் கேட்கக்கூட முடியாதே!’ என்று அண்ணா புலம்பினார்

போராட்டம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அண்ணா விரும்பினார். ஆனால், அதை எப்படி நிறுத்துவது என்று அவருக்குத் தெரியவில்லை. போராட்டத்தை நிறுத்துமாறு மாணவர்களைக் கேட்டுக் கொண்டு, ஏற்கனவே, பிப்ரவரி 9, பிப்ரவரி 11 ஆகிய இரண்டு நாட்களிலும் அண்ணா அறிக்கைகள் வெளியிட்டார். மேலும் பிப்ரவரி 9 ஆம் நாள், அவர் மாணவர் தலைவர்கள் எல்.கணேசன், ந.நாவளவன் ஆகிய இருவரிடமும் போராட்டத்தை நிறுத்தி விடுமாறு நேரிலேயே கூறினார். ஆனால், அவருடைய அறிவுரையை அவர்கள் ஏற்க மறுத்து விட்டனர்.

எனினும், இன்னொரு முறை முயற்சி செய்ய அண்ணா முடிவு செய்தார். எல்.கணேசனை அழைத்து வருமாறு சா.முத்துவை (நுங்கம் பாக்கம் ஹாரிங்டன் சாலையில் வசித்த சென்னையின் எல்லா கழகத் தோழர்களாலும் அறியப்பட்டவர்) அவர் அனுப்பினார். பிப்ரவரி 11 ஆம் நாள், இரவு 8.30 மணியளவில் மாணவர் தலைவர்கள் இரகசியமாகச் சந்திக்கும் இடங்களில் ஒன்றான, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கீழ்ப்பாக்கம் காவல் நிலையத்திற்குப் பின்புறம் உள்ள நேரு பூங்காவில் எல்.கணேசனும் மற்ற மாணவர் தலைவர்களும் பேசிக் கொண்டிருந்தனர். பூங்காவில் மாணவர் தலைவர்கள் இரகசியக் கூட்டம் நடத்தும் போதெல்லாம். செ.முத்து பூந்தமல்லி நெடுஞ்சாலையில் நின்று கொண்டு காவல் காப்பதும், காவலர் நடமாட்டம் பற்றி மாணவர்களுக்கு இரகசியச் செய்தி அனுப்புவதும் வழக்கம். எனவே, அண்ணா அனுப்பியதும், அவர் நேராக நேரு பூங்காவிற்குச் சென்று எல்.கணேசனிடம் அண்ணா அழைத்து வரச் சொன்னார் என்று கூறினார். அங்கிருந்த மாணவர் தலைவர்களுக்கு அண்ணா என்ன கூறுவார் என்று தெரியும்; எனவே அவர்கள் அண்ணாவைப் பார்க்கப் போக வேண்டாம் என்று எல்.கணேசனிடம் கூறினர். ஆனால், எல்.கணேசன் தி.மு.க. உறுப்பினர். அண்ணாவைத் தலைவராக ஏற்றுக் கொண்டவர். எனவே. அண்ணாவின் அழைப்பை அவரால் புறக்கணிக்க முடியவில்லை. மற்ற மாணவர் தலைவர்களைத் திரும்பி வரும் வரை அங்கேயே



இருக்குமாறு கூறிவிட்டு, எல்.கணேசன், நுங்கம் பாக்கத்தில் உள்ள அண்ணாவின் வீட்டிற்குச் சென்றார்.

எல். கணேசன் மாடிக்குச் சென்று அண்ணாவைப் பார்த்தார். இருவரும் ஒரு மணி நேரத்திற்கும் மேலாகப் பேசினர். போராட்டத்தை நிறுத்த வேண்டியதற்கான காரணங்களை விளக்கி அண்ணாவே நீண்ட நேரம் பேசினார்: “அனைத்துப் போராட்ட முறைகளையும் நீங்கள் கையாண்டு விட்டீர்கள். கிட்டத்தட்ட உங்கள் ஆயுதக் கிடங்கில் உள்ள அனைத்து ஆயுதங்களையும் நீங்கள் பயன்படுத்தி விட்டீர்கள். போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்து விட்டது. இப்போது நீங்கள் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டும். விதைத்த பின்பு அறுவடைக்காக நாம் காத்திருக்க வேண்டும். எச்சரிக்கையாக இருப்பது கோழைத்தனமல்ல. வீரத்துடன் விவேகமும் இருந்தால்தான் வெற்றி கிடைக்கும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

இது ஒரேடியாக முடிந்துவிடக் கூடிய முழுமையான ஒரு போராட்டம் அல்ல இது போராட்டத்தில் ஒரு கட்டம்தான், போராட்டத்தில் ஒரு பகுதிதான். சிக்கலுக்குத் தீர்வுகாண அரசியல் தலைவர்களிடம் விட்டு விடுங்கள். இப்போது இதை நீங்கள் நிறுத்தவில்லை என்றால், போராட்டம் உங்கள் கையை விட்டு நழுவிப் போய் விடும். அதன் பின், போராட்டம் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்காது. எனவே, போராட்டத்தை உடனடியாக நிறுத்தி விடுங்கள்” என்று அண்ணா கடுமையாக அறிவுறுத்தினார். எல்.கணேசனை இணங்க வைப்பதற்காக, பெரும்பாலான நேரம் அண்ணா வலிமை மிக்க ஆங்கிலத்திலேயே பேசினார்.

இன்னும் எல்.கணேசன் அரை மனதுடனேயே இருந்தார்; இணக்கமில்லாமலேயே இருந்தார். அண்ணாவின் ஆற்றல் மிக்க பேச்சால் கவரப் பெற்ற எல்.கணேசன், கட்டுப்பாடு மிக்க ஒரு தொண்டனாகத் தன்னுடைய தலைவரின் அறிவுரையை இறுதியில் ஏற்றுக் கொண்டார். “இலால் பகதூர் சாத்திரியே கூறினாலும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் ஆனால், நீங்கள் எங்கள் பாசத்திற்குரிய தலைவர் தான் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்கிறேன். அண்ணா!” என்று எல்.கணேசன் கூறினார்

அதன்பின், எல்.கணேசன் நேரு பூங்காவிற்குத் திரும்பி, அங்குக் காத்திருந்த மாணவர் தலைவர்களிடம், அண்ணாவிற்கும் அவருக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையை விவரமாக எடுத்துக் கூறினார். அங்கிருந்த அனைவருக்கும் அது அதிர்ச்சியாக இருந்தது. அண்ணாவின் அறிவுரையை ஏற்பதற்கும் பலர் மறுத்தனர். அதன்பின், போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டிய அவசியம் பற்றி விளக்கிக் கூறுவது எல்.கணேசனின் முறையானது, பிப்ரவரி 12 ஆம் நாள் முழுக்கடையடைப்புக்குப் பின்பு எந்தப் போராட்டத் திட்டத்தையும் மாணவர் குழு அறிவிக்கவில்லை என்பதை கணேசன் தெளிவுபடுத்தினார்.

பெரும்பான்மையான மாணவர் தலைவர்கள் சிறையில் இருக்கும்போது, அவர்களிடம் கலந்துரையாடாமல் மேலும் போராட்டத் திட்டத்தை அறிவிப்பது நல்லதல்ல, மறுநாள் முழு அடைப்பு நடைபெறுவதுதான் உச்சகட்டம் அத்துடன் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திக் கொள்வதுதான் சிறந்தது, வீரஞ்செறிந்த தங்கள் போராட்டம் எந்த ஒரு உருப்படியான முடிவையும் காணாமல், மறுநாள் திடீரென்று முடிவுக்கு வருகின்றதே என்று கண்களில் நீர் மல்க மிகுந்த தயக்கத்துடன், போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க மாணவர் தலைவர்கள் கடைசியில் ஒத்துக் கொண்டனர்.

பெரும்பான்மையான மாணவர் தலைவர்கள் சிறையில் இருந்தனர். பெ.சீனிவாசனைக் காவலர்கள் விடாமல் தேடி வந்தனர். அவர் தலைமறைவாகி, காஞ்சிபுரத்தில் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் மு.பி.பாலசுப்பிரமணியம் வீட்டில் சில நாட்கள் இருந்தார். அதன் பின் அவர் ஆந்திரா சென்றுவிட்டார். எனவே. போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது என்ற அறிக்கையை எல்.கணேசனே தயார் செய்து, பிப்ரவரி 12 ஆம் நாள் பெசீனிவாசன் பெயரில், அனைத்துச் செய்தித் தாள்களுக்கும் அனுப்பி வைத்தார்.

“இன்று (பிப்ரவரி 12) வெற்றிகரமாக நடைபெறும் முழுக் கடையடைப்புடன், முன்பு அறிவிக்கப்பட்ட போராட்டத் திட்டங்கள் அனைத்தும் முடிவுக்கு வருகின்றன” என்ற தீர்மானம், தமிழ்நாடு மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவின் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்டது. போராட்டம் தொடர்ந்து நடத்துவதைக் கைவிடுமாறு மாணவர்களைக் கேட்டுக் கொண்டது. அண்மையில் ஏற்பட்ட நிகழ்வுகள்: முக்கியமான அரசியல் தலைவர்கள் மற்றும் செய்தித் தாள்களின் அறிவுரைகள்: மாண்புமிகு மைய அமைச்சர்கள் சி.சுப்பிரமணியம், ஓ.வி. அளகேசன் ஆகியோரில் பதவி விலகல்கள் மற்றும் ஆதரவளிப்பதாக அவர்கள் அளித்துள்ள உறுதி மொழிகள் ஆகியவற்றால் உருவாகியுள்ள எதிர்பாராத, ஆனால் மனநிறைவு அளிக்கக்கூடிய, சூழ்நிலைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இம்முடிவு எடுக்கப்பட்டதாகக் குழு, அறிவித்தது.”

**க. திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்



தூய்மையான ஒரு காரணத்திற்காகத் தங்கள் இன்னுயிரை ஈந்த அனைவருக்கும் வீர வணக்கத்தையும், இரங்கலையும் செயற்குழு தெரிவித்துக் கொண்டது. மேலும், பிப்ரவரி 17 ஆம் நாள் காலை 11.00 மணிக்குக் கோகலே மன்றத்தில் பொதுக்குழுக்கூட்டம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. மாநிலம் முழுவதிலிருந்தும் ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு சார்பாளர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. புதுச்சேரி, கேரளா, மைசூர், ஆந்திரா, வங்காளம், அசாம், மகாராட்டிரா முதலிய இந்தி பேசாத மாநிலங்களிலிருந்தும் பேராளர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

போராட்டம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனடியாகவும், நிபந்தனை இல்லாமலும் விடுதலை செய்ய வேண்டும் என்று சென்னை அரசைக் குழு கேட்டுக் கொண்டது. மேலும், பிப்ரவரி 12 ஆம் நாள் முழுக்கடையடைப்பை வெற்றிகரமாக நடத்த ஒத்துழைப்பு வழங்கிய பொதுமக்களுக்குக் குழு நன்றி தெரிவித்துக் கொண்டது.

போரட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கத் தமிழ்நாடு மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு எடுத்த முடிவை, முதலமைச்சர் மீ. பக்தவத்சலம் மனநிம்மதியுடன், முதலில் வரவேற்றார். “இன்று (பிப்ரவரி 13) முதல் அவர்கள் அனைத்து வகையான நடவடிக்கைகளையும் நிறுத்திக் கொண்டால், நான் மகிழ்ச்சி அடைவேன்” என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார். பிரதமர் இலால் பகதூர் சாத்திரியும் மாணவர்களின் முடிவை வரவேற்றுப் பாராட்டினார். அண்ணா வெளியிட்ட அறிக்கையில், போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கத் தமிழ்நாடு மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவின் செயற்குழு எடுத்த முடிவை மன நிம்மதியுடனும் நன்றியுடனும் வரவேற்பதாகக் கூறினார்.”

மொழிப்போர் தளபதி எல்.ஜி.இந்தி எதிர்ப்புப் போரை முன்னணியில் நின்று நடத்தினார் என்பதற்கு அறிஞர் அண்ணா அவரை அழைத்துப் பேசுவதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். தி.மு. கழகம் நடத்திய 4 ஆவது இந்தி எதிர்ப்புப் போர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெரும் போராட்டமாகும். அதை நிறுத்துவது சமூக விரோதிகளிடமிருந்து மாணவர்களையும் மக்களையும் காப்பாற்றுவது அப்போதைய சூழ்நிலையில் எல்.ஜியிடமே இருந்தது. அத்தகைய ஒரு முன்னணி வீரராகத் திகழ்ந்தவர்தான் இன்று இயற்கை எய்திவிட்டார். மரணம் அடைந்து விட்டார். அவருக்குத் திராவிட இயக்கம்குறிப்பாக தி.மு.கழகம் வீரவணக்கம் செலுத்துகிறது.

* * * *

வரலாற்று நாயகர்களை அறிமுகப்படுத்துவதிலும் களத்தில் நின்று அஞ்சாமல் கடமையாற்றுவதிலும் சிறந்து விளங்கிய எல்.ஜி.திராவிடப் பேரியக்கக் கொள்கைகளை உள்கவர்ந்து புதிய உத்தியோடு அவற்றை விளக்குவதில் மிகச் சிறந்தவராகவும் அவர் விளங்கினார். அதற்கு எடுத்துக் காட்டாகக் கீழ்க் காணும் நிகழ்வினை நாம் கூற விரும்புகிறோம்.

**எல்.ஜி. அப்போது மாநிலங்களவை உறுப்பினராக இருந்தார். கும்மிடிப் பூண்டியில் தி.மு.கழக மாணவர் பாசறைக் கூட்டம் ஒன்று பேராசிரியர் க.அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. எல்.ஜி.அந்தப் பாசறைக் கூட்டத்திற்கு எம்மை அழைத்துச் சென்று இருந்தார். இந்நிகழ்ச்சி 40 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. அந்தப் பாசறைக் கூட்டத்தில் எல்.ஜி.90 நிமிடங்கள் பேசினார்.**

**ஓர் உயர்நிலைப் பள்ளி மாணவனாக இருந்த எல்.ஜி. படிப்படியாக அவரின் வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்ப திராவிட இயக்கத்தையும் பிற இயக்கங்களையும் கண்டு உணர்ந்த நிலைகளை அவர் மிக ஆழமான முறையில் அந்தப் பாசறைக் கூட்டத்தில் எடுத்து வைத்தார். திராவிட இயக்கம் மட்டுமே அவரைக் கவர்ந்ததற்கான காரணத்தை எடுத்துச் சொன்னார். கூட்டத்திற்கு வந்திருந்த மாணவர்கள் மிக அமைதியாகக் கேட்டனர். எல்.ஜி.யின் பேச்சை பேராசிரியர் மிகக் கூர்ந்து கேட்டார். பிறகு அப்பேச்சை 58 பக்கமுள்ள ஒரு புத்தகமாக எல்.ஜியே வெளியிட்டார்.**

பாசறைக் வட்டத்தில் எல்.ஜி. ‘நமது குறிக்கோள்’ எனும் தலைப்பில் பேசினார். எல்.ஜி. அதையே புத்தகமாக்கி ‘இலட்சிய வரலாறு’ என்று மகுடமிட்டார். எமக்கும் ஒரு படியைத் தந்தார். புத்தகத்தைப் படித்தோம். பேச்சையும் கேட்டோம். புத்தகம் காணாமல் போய்விட்டது. ஆனால் இந்தப் புத்தகத்தை நினைப்பு வைத்திருந்து பேராசிரியர் எம்மிடம் கேட்டார். நாம் பெரிதும் வியந்தோம்.

பேராசிரியரின் இறுதிகாலத்தில் எனக்கு வாய்ப்புக் கிடைக்கிற போதெல்லாம் அவரைப் பார்த்து பேசிவிட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தோம். அப்படி ஒரு சந்திப்பின்போது பேராசிரியர் எம்மிடம் நிகழ்த்திய உரையாடல் வருமாறு:

“ஏன்யா நம்ம எல்.கணேசன் கும்மிடிப்பூண்டியில் நடந்த மாணவர் பாசறையிலே பேசிய பேச்சை பொஸ்தகமாகப் போட்டாங்க மிகச் சின்ன பொஸ்தகம் ஒரு 80 பக்கம் இருக்கும். தி.மு.க இலட்சிய வரலாறு அந்தப் பொஸ்தகத்திற்குத் தலைப்பு அந்தப் பொஸ்தகம் உங்கிட்ட இருக்கா அந்தப் பேச்சைப் படிச்சிருக்கியா”.

“பாசறைப் பேச்சை கேட்டேன். நீங்கதான் கடைசியாப் பேசினீங்க. எல்.ஜியின் பேச்சு மிக அருமையான கொள்கை விளக்கப் பேச்சாக இருந்தது. ஆனா அந்தப் பேச்சு முழுசுமா நினைவில் இல்லை. நீங்க சொல்ற புத்தகமும் என்னிடம் இல்லை, ஆனால் அந்தப் புத்தகத்தைப் படிச்ச நினைவு மட்டும் இருக்குங்க.

அந்தப் பொஸ்தகம் கிடைச்சா திரும்ப ரிபிரிண்ட் போட முயற்சி பண்ணுயா, அந்த எல்.ஜி.யின் பேச்சு இயக்க அடிப்படை கொள்கையை சொல்றவிதம் நல்லா இருக்குயா”

“ஆகட்டுங்க புத்தகம் கிடைச்சதும் கண்டிப்பா வெளியிட்டு விடுகிறேன்.”

இப்பேச்சுக்குப் பிறகு எல்.ஜி.யின் அந்தப் புத்தகத்தைத் தேடினேன். எமக்குக் கிடைக்கவில்லை. பேராசிரியர்க்கு அந்தப் புத்தகத்தை மறுவெளியீடு செய்து என்னால் காட்ட முடியவில்லை. பேராசிரியரும் இன்று நம்மிடையே இல்லை எமக்கும் அது மறந்தே போயிற்று.

குத்தாலம் கல்யாணம் சென்னைக்கு வந்தால், எம்மைப் பார்க்காமல் பெரும்பாலும் ஊருக்குத் திரும்பமாட்டார். 2023 பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் என்னைச் சந்தித்துப் பேசுகிற போது எல்.ஜி.யின் புத்தகத்தைப் பற்றிச் சொன்னார். அந்தப் புத்தகத்தை உங்களுக்கே கிடைக்கும்படி செய்கிறேன் என்றும் தெரிவித்தார். அந்தப் புத்தகத்தைப் பாதுகாத்து வைத்து இருந்த சுவாமிமலையைச் சேர்ந்த சம்பத் எனும் தோழர் அந்தப் புத்தகத்தை அனுப்பிவைத்தார்.

அந்தப் புத்தகத்தை உடனடியாக அச்சிட முடியவில்லை. இப்போது அதை அச்சிடும் பணியைத்தொடங்கி இருக்கின்றோம். அநேகமாக சில நாள்களில் அது முடிந்துவிடும். அந்த சிறு நூலைப் படிப்பதன் மூலம் எல்.ஜி. ஏன் தி.மு.க.வானார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அதைவிட முக்கியமானது, உயர்நிலைக் கல்வியை முடித்த ஓர் இளைஞர் எப்படி அரசியல் கட்சியைத் தேர்வு செய்கிறான் என்பதை எல்.ஜி. அவரது உரையில் தெளிவுபடுத்தியிருப்பது அவர் எடுத்துரைக்கும் முறை மிகவும் ஈர்ப்புக்குரியது.

‘நான் ஏன் கம்யூனிஸ்டு ஆனேன்’ என்பது போல ‘நான் ஏன் தி.மு.க.வானேன்’ என்பதை எல்.ஜி. மிக ஆணித்தரமாக தனது அந்த உரையில் எடுத்துச் சொல்லியிருப்பார். அந்தப் புத்தகம் கிடைப்பவர்கள் படித்தால் அதனை அறிந்து கொள்வர்.

- **மேடை பேச்சா?**
- **எழுத்தா?**
- **அரசியல் கல்வியா?**
- **மார்க்சிய மெய்யியலா?**
- **களப்பணியா?**
- **போராட்டமா?**
- **சிறையா?**

எனும் எதிலும் எல்.ஜி.தன் ஆற்றலை வெளிப்படுத்த தவறியதில்லை. இயக்கத் தோழர்களிடையே நட்பை மலைப்போன்ற உறுதியோடு பழகிக் காட்டியவர். நெருக்கத்தில் தோழமையின் உச்சத்தை நடைமுறைப் படுத்தியவர். நம்மோடு வாழ்ந்த எல்.ஜி. இன்றில்லை எனும் பெருமை உடையவரானார், வாழ்க அவர் புகழ்!

---



சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அண்ணாநகர், ஆயிரம்விளக்கு தொகுதி ஆலோசனைக் கூட்டம் காம்தார் நகரில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு 2026 சட்டமன்றத் தேர்தல் களப் பணிகள் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து விரிவாக உரையாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர் சைதை சாதிக், பகுதி செயலாளர்கள் ந. இராமலிங்கம், மா.பா.அன்புதுரை, ச.பரமசிவம், வினோத் வேலாயுதம் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

---

### ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி –

## 118வது வட்டக் கழகச் செயல்வீரர் டி.பிரபு (எ) அழகு மறைவு!

### நே.சிற்றரசு – நா.எழிலன் – மா.பா.அன்புதுரை – கோ.யுவராஜ் – மல்லிகா யுவராஜ் அஞ்சலி!

*சென்னை, ஜன. 12 - சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்டக் கழகச் செயல்வீரர், கழகம் முன்னோடி த.மனோகரனின் சகோதரரும், இராயப்பேட்டை (நினைவில் வாழும்) ஜெ.டி. தயாளனின் இளைய மகனும், ஸ்ரீ கங்கை அம்மன் தேவஸ்தானத்தின் பொருளாளரும், 118 வது வட்டக் கழகச் செயல்வீரர் டி.பிரபு (எ) அழகு (வயது 69) அவர்கள் நேற்று முன் தினம் (10.01.2026 - சனிக்கிழமை) இரவு 9 மணி அளவில், உடல் நிலை குறைவினால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*



*அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்ததும் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம்விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை, 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ், 118 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ் மற்றும் பா.வினோத்குமார், வேலுமணி, தியாகராஜன், எஸ்.சேகர், கே.மதுரை, கே. செல்வம், எஸ்.வெங்கடேஷ், ஆர்.வி.சௌந்தர், கே.பி.ஜெயராமன், ஜான்சன், தனலட்சுமி, திருத்தணி நாராயணபாபு, செந்தில், ஆனந்த், ராஜசேகர், சுந்தர், ராஜேந்திரன், சந்திரபாபு மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகி கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.*

*அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (11.01.2026 - ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 4 மணி அளவில் இராயப்பேட்டை, எண்.15, சீனிவாச பெருமாள் சன்னதி, 2 வது தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்படும் மயிலாப்பூர் இடுகாட்டில் தகனம் செய்யப்பட்டது.*

---

### மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி ஏற்பாட்டில்

## பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் திராவிட பொங்கல் விழா!

### மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொங்கல் பரிசு வழங்குகிறார்!

*பல்லாவரம், ஜன.12- பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் திராவிட பொங்கல் விழா இன்று (12.01.2026 - திங்கட்கிழமை) மாலை குரோம்பேட்டை ஜி எஸ் டி ரோட்டில் அமைந்துள்ள வசந்தம் திருமண மண்டபத்தில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் தலைமையில் கொண்டாடப்பட உள்ளது.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளர் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.*

*இந்தாண்டு பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் வடக்கு பகுதி பல்லாவரம் தெற்கு பகுதி செம்பாக்கம் வடக்கு பகுதி பம்மல் தெற்கு பகுதி பம்மல் வடக்கு பகுதி புனித தோமையார் மலை ஒன்றியத்துக்கு உட்பட்ட பொழிச்சலூர் ஊராட்சி திரிசூலம் ஊராட்சி சென்னை மாநகராட்சி 159 ஆவது மீனம்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள 5 ஆயிரம் கழக நிர்வாகிகள் மற்றும் 2 ஆயிரம் தோழமைக் கட்சி நிர்வாகிகளுக்கு இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் பொங்கல் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.*

*இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட் செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.*



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் எழும்பூர், ஆல்பர்ட் திரையரங்கம் அருகிலுள்ள பியாஸ் மஹாலில் பொங்கல் விழா நடைபெற்றது. இவ்விழாவில் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கழக உடன்பிறப்புகள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளிட்ட 1,500 கழகத்தினருக்கு பச்சரிசி, வெல்லம், நெய், ஏலக்காய், முந்திரி, திராட்சை, காலண்டர் மற்றும் புடவை, வேட்டி, சட்டை உள்ளிட்ட பொங்கல் பரிசுப் பொருள் தொகுப்பைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்கினார்.